# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை-600 106.

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண். 17/2016 நாள் 23.09.2016.

திருநங்கையர்கள் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கீழ்க்கண்ட தெளிவுரைகளை மாவட்டத் தேர்தல் அலுவலர்களுக்கு வழங்கியுள்ளது.

1. பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடத்திற்கு திருநங்கையர்கள் வேட்புமனு தாக்கல் செய்கையில் வாக்காளர் பட்டியல்களில் உள்ள திருநங்கையர்களின் பாலினப் பதிவுகளைக் கொண்டு முடிவு செய்வதைத் தவிர்த்து திருநங்கையர்களின் விருப்ப உரிமையின் அடிப்படையில் முடிவு செய்யலாம்.

2. ஒரு குறிப்பிட்ட பிரிவினைச் சார்ந்த, அதாவது ஆதிதிராவிடர்/பழங்குடியினர் பெண்களுக்கு ஒரு பதவி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பின் அவர் அந்த குறிப்பிட்ட பிரிவினரைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

3. பொதுவாக அனைத்து வேட்பாளர்களும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதை முறைப்படுத்துவது அவசியம் என ஆணையம் கருதுவதால் வேட்பாளர்கள் வேட்பு மனுதாக்கல் செய்ய வரும்பொழுது வேட்பாளரை முன்மொழிபவர் மற்றும் அவர் விரும்பும் மூன்று நபர்களை மட்டும் அனுமதிக்க அனைத்து மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்களும், அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்களும், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

23/09/16

மக்கள் தொடர்பு அலுவலர்